# சிவகுரு ஆதீனம்
# SIVAGURU ATHEENAM

**சிவகுரு ஆதீன மாதாந்த செய்தி மடல்**
**கலியுகம் 5123 பிலவ வருடம் - ஆடி மாதம் (4ம் மாதம்)**
**Monthly News Bulletin of Sivaguru Atheenam**
**Kaliyuga 5123 Pilava Year – July Month (4th Month)**

மலர் 1 இதழ் 4 | Volume 1 Issue 4




ஆடித் திங்கள் ஆடிப்பிறப்பிற்குரிய விசேட மாதமாகும். தமிழ் வருடத்தின் ஆடிமாதம் முதலாம் நாள் இந்த ஆடிப்பிறப்பு கொண்டாடப்படுகிறது. அதாவது தட்சிணாயன காலத்தின் தொடக்க தினமே ஆடிப்பிறப்பாகும். இக்காலத்தில் கோடைகால வெப்பம், காண்டாவனம் உட்பட தணிந்து குளிர்மை படிப்படியாக அதிகரிக்கின்றது. இது தமிழர்களிற்குரிய தனித்துவமான பண்டிகையாகும்.



## குருவுடன் ஒரு நிமிடம்....

**காதற்ற ஊசியும் வாராது**
**காண் கடைவழிக்கே...**

பட்டினத்து அடிகளார்.

**பிலவ வருடம் ஆடித் திங்கள் எட்டாம் நாள் பட்டினத்து அடிகளாரின் குருபூசை தினமாகும்.**





## சிவகுரு சிந்தனை....

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' எனும் ஆன்றோர் வாக்கிற்கிணங்க மனிதர்களாகிய எமது வாழ்வில் ஆலயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒரு கிராமத்தின் மையமாக ஆலயமும். ஆலயத்தின் மையமாக இறைவனும் அமைந்திருக்கின்றனர்.

இறைவனுக்கும் எமக்குமான உறவே கடைசிவரையான. இன்னும் சொல்லப்போனால் இப்பிறவியில் மட்டுமல்ல எல்லாப் பிறவிகளிலும் இருக்கக்கூடிய நிரந்தரமான உறவாகும்.

அந்த வகையில் தமிழ்க் கடவுளான முருகப்பெருமான் சுப்ரமண்ய பரமேஸ்வரனாக அகிலாண்டகோடி பிரமாண்டங்களையும் ஆட்சிபுரிகின்ற தன்னிகரில்லா தலைவனாக. தமிழர்களுக்கெல்லாம் இறைவனாக அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

எமக்கெல்லாம் தேசிய ஆலயமாக. முருகப்பெருமானின் திருவருள் எப்பொழுதும் வரையறையற்று கிடைக்கின்ற இடமாக. சித்தர்களுடைய சான்னித்தியம் எப்பொழுதும் கிடைக்கின்ற இடமாக நல்லூர் கந்தசுவாமி ஆலயம் விளங்குகிறது.

அவ்வாறான சிறப்பான நல்லைக் கந்தப்பெருமானுக்கு இம்மாதம் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகிறது. நாம் அனைவரும் நல்லைக் கந்தப்பெருமானை வணங்கி மகோற்சவத்தில் ஆச்சார சீலர்களாக விரதம் அனுஷ்டித்து முருக பக்தியில் திளைப்போமாக.

'ஆறுதலை முருகா ஆறுதலை தருக!'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்தகால பதிவுகள்

பிலவ வருடம் ஆனி மாதம் முதலாம் நாள் (01.03.5123) செவ்வாய்க்கிழமை யாழ் மாவட்ட செயலர் திரு க. மகேசன் அவர்களை யாழ் மாவட்ட சர்வமத பேரவையினர் யாழ் மாவட்ட செயலகத்தில் COVID - 19 தொற்று தொடர்பாக சந்தித்து கலந்துரையாடி மகஜர் ஒன்றை கையளித்தனர். இச்சந்திப்பில் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த மதகுருமார்கள் நேரடியாகவும் zoom செயலி ஊடாகவும் கலந்து கொண்டிருந்தனர். யாழ் மாவட்ட சர்வமதப் பேரவையின் செயற்குழு உறுப்பினர்களில் ஒருவராகிய சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் இதில் கலந்துகொண்டு கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். இச்சந்திப்பானது ஆக்கபூர்வமானதாகவும் பயனுள்ளதாகவும் அமைந்திருந்தது. இதனைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களுக்கும் இச்சந்திப்பு தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.





யாழ் மாவட்ட சர்வமத பேரவை, பிலவ வருடம் ஆனி மாதம் இருபத்தெட்டாம்நாள் (28.03.5123) திங்கட்கிழமை அன்று காலை 10 மணிக்கு யாழ் மத்திய பேருந்து நிலையத்தில் கொரொனா விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்தார்கள். அந்த அடிப்படையில் யாழ் மாவட்டத்தில் முக்கியமான பத்து இடங்களில் கொரொனா விழிப்புணர்வு பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஆரம்ப நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், யாழ் நாகவிகாரை விகாராதிபதி வண.ஸ்ரீ விமலதேரர், யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகளார், யாழ் - கிளிநொச்சி உலமா சபைத்தலைவர் சுபியான் மௌலவி ஆகிய நான்கு சமயத் தலைவர்கள் உள்ளிட்ட மதகுருமார்களும் யாழ் மாவட்ட செயலர் திரு. க. மகேசன் அவர்களும் யாழ் மாவட்ட சர்வமத பேரவை அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.





கொக்குவில் யாழ்விஷன் கிருஷ்ணா அறநெறிப் பாடசாலையில் பிலவ வருடம் ஆனி மாதம் இருபத்தொன்பதாம் நாள் (29.03.5123) செவ்வாய்க்கிழமை சதுர்த்தி பூசையும் மாணிக்கவாசகர் குருபூசையும் நடைபெற்றன. தொடர்ந்து தெய்வீக மரங்கள் (நாகலிங்க பூமரம், சந்தனமரம், வில்வமரம்) நாட்டப்பட்டன. இந்நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் அவர்களின் ஆசியுரையும் கலந்துரையாடலும் இடம்பெற்றது.





## எதிர்கால நிகழ்வுகள்

**நல்லூர் கொடியேற்றம்**

பிலவ வருடம் ஆடி மாதம் இருபத்தெட்டாம் நாள் (28.04.5123) வெள்ளிக்கிழமை நல்லூர் கந்தசுவாமி ஆலய கொடியேற்றம்.

**சிவகுரு ஆதீனம்**
692, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
அலுவலக நேரம் : தினசரி பி.ப 4 - 6

+94 21 222 6711 (4 - 6 pm daily)
sivaguruatheenam@gmail.com
சிவகுரு ஆதீனம் - Sivaguru Atheenam

**Sivaguru Atheenam**
692, Pointpedro road,
Nallur, Jaffna.
**Office time : 4 - 6 pm daily**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவகுரு சங்கமம்

சிவகுரு சங்கமம் என்பது காலாண்டிற்கொருமுறை நடைபெறும் சிவகுரு ஆதீன அங்கத்தவர்களின் ஒன்றுகூடல் ஆகும். பிலவ வருடம் சித்திரை மாதம் 1ம் நாள் (01.01.5123) புதன்கிழமை முதலாவது சிவகுரு சங்கமம் சிறப்பாக நடைபெற்றது.









பிலவ வருடம் சித்திரை மாதம் முதலாம் நாள் (01.01.5123) புதன்கிழமை சித்திரை வருடப்பிறப்பு நன்னாள் அன்று உதயமாகிய சைவத்தமிழ் தொலைக்காட்சியின் அங்குரார்ப்பணத்திற்கு சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் அவர்கள் ஏனைய சைவப் பெரியார்களுடன் இணைந்து ஆசியுரை வழங்கினார்.

சுவாமிகள் அவர்கள் தனது ஆசியுரையில், ஈழத்தின் தேவைப்பாடான சைவத்தமிழ் மறுமலர்ச்சிக்கு இச்சைவத்தமிழ் தொலைக்காட்சி ஒரு உந்து சக்தியாக இருக்கும் என்ற நம்பிக்கையை தெரிவித்ததோடு காலத்திற்கு ஏற்ற வகையில் சிறியவர் தொடக்கம் முதியவர், சைவத் தலைவர்கள் மற்றும் சைவ நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பில் முக்கிய பங்காற்றி சகல பணிகளையும் விரிவாக, சிறப்பாக மேற்கொண்டு தொடர்ந்து வளர்ச்சியடைய வேண்டும் எனவும் ஆசிகள் வழங்கினார்.



பிலவ வருடம் சித்திரைத் திங்கள் இரண்டாம் நாள் (02.01.5123) வியாழக்கிழமை கார்த்திகை நட்சத்திரமும் திருதியைத்திதியும் கூடிய நன்னாளில கந்தர்மடம் பழம் வீதியில் அமைந்துள்ள அருள்மிகு ஞானவைரவர் ஆலயத்தில் இடம்பெற்ற 'இருதுருவ இசைநாதம்' எனும் இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வில் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கியதோடு இறுவெட்டையும் வெளியிட்டு வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பிலவ வருடம் சித்திரை திங்கள் ஐந்தாம் நாள் (05.01.5123) ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற சைவத்தமிழ் பேரவையின் திருக்கோவில் நிபுணர் குழு கூட்டத்தின் முதலாவது அமர்வானது நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் மற்றும் சிவகுரு ஆதீன குருமகா சந்நிதானங்கள் முன்னிலையில் நடைபெற்றது.








இந்நிகழ்வில் குருமகா சந்நிதானங்கள், இந்து, சைவ குரு பீடாதிபதிகள், சைவப் பெரியார்கள், சைவ சமய அமைப்புக்களின் தலைவர்கள், ஆலய அறங்காவலர்கள், யாழ் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீட பீடாதிபதி உள்ளிட்ட விரிவுரையாளர்கள், புலமை சார் சைவச் சான்றோர்கள் மற்றும் சிவதொண்டர்கள் ஆகியோர் பங்கேற்று கருத்துப் பகிர்வுகளை மேற்கொண்டனர்.

கூட்டத்தில் பின்வரும் பன்னிரு அம்ச திட்டம் அங்கீகரிக்கப்பட்டு தொடர் சிவப்பிராந்திய / மாவட்ட கலந்தமர்வுகளை மேற் கொண்டு, தொடர்ந்து முழுமையான வரைபு தயாரிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

1. திருக்கோவிலின் நான்கு சக்கரங்களாக விளங்கும் குருமார்கள், தர்மகர்த்தாக்கள், வழிபடுவோர், கோவில் சார்ந்த அமைப்பி னர் ஒருங்கிணைந்து சைவத் தமிழ் மறுமலர்ச்சியில் பங்கேற்பதற்கான வேலைத்திட்டம், ஒழுக்கக் கோவை, பொது ஒழுங்கு விதிகள், சட்டவாக்கங்கள் தயாரித்தல்

2. குருமார்களுக்கான வேத சிவாகம திருமுறை, சைவ சித்தாந்த கற்கைகள், பயிற்சிநெறிகள்

3.கோவில் சார்ந்த சைவ அறப்பணி நிதியம் - கோவிலை சார்ந்த நலிவுற்ற குடிகளுக்கும் கல்வி மற்றும் மருத்துவ பொது ப்பணிகளிற்கும் உதவுதல்

4. அறநெறிப் பாடசாலை - சைவத்தமிழ் இளையோருக்கு வழிபாட்டு, பண்பாட்டு, சமய சமூக அறம்சார் செயற்பாடுகளை வலுவாக, தொடர்ச்சியாக பொறிமுறை சார்ந்து முன்னெடுத்தல்

5. உளஆற்றுப்படுத்துகைள் மக்களிற்கு வழங்கல், குருமார்களுக்கான பயிற்சி நெறிகள் வழங்கல்.

6. திருக்கோவிலும் இயற்கை நேயமும், தலவிருட்சம், பூந்தோட்டம் இயற்கை விவசாயம், மரம் நடுகை

7. நீர் முகாமைத்துவமும் திருக்கோவிலும் - தீர்த்தம, குளம், கேணி, கோவிற் கிணறு, நிலத்தடிநீர் சேமிப்பு

8. திருக்கோவில் சார் பொருளாதாரம்

9. கோவில்சார் மரபுரிமைகள் பாதுகாத்தல், கலைகள் வளர்த்தல்

10. சோதிடம், பஞ்சாங்கம், வாழ்க்கை துணை நலம் தேர்வு, சைவத்தமிழ் பெயர் சூட்டுதல்

11. பன்னிரு திருமுறை, திருப்புகழ், அருளாளர் பாக்கள் பயிற்சி, ஓதுவார், சிவதொண்டர், சிவமங்கையர் பயிற்சிகள்

12. சிவசின்னங்கள், சிவ தீட்சை, வாழ்வியல் சடங்குகள் விடயங்களில் கோவிலை சார்ந்த குடிகளுக்கு உதவுதல்

என்பன வரைபிற்கான ஆரம்ப முன்மொழிவுகளாக சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டன. கூட்டத்தில் பங்கேற்ற பலரும் தீர்மானமிக்க ஒருங்கிணைக்கும் சக்தியாக பல்வேறு அமைப்புக்களும் இணைந்துள்ள சைவத் தமிழர் பேரவையை நாம் அனைவரும் சேர்ந்து சைவத்தமிழ் மக்களிடையே கொண்டு செல்லும் வேலைத் திட்டத்தை முன்னெடுப்போம் என முடிவு செய்தனர்.


**சிவகுரு ஆதீனம்**
692, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
அலுவலக நேரம் : தினசரி பி.ப 4 - 6

+94 21 222 6711 ( 4 - 6 pm daily)
sivaguruatheenam@gmail.com
சிவகுரு ஆதீனம் - Sivaguru Atheenam

**Sivaguru Atheenam**
692, Pointpedro road,
Nallur, Jaffna.
Office time : 4 - 6 pm daily




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுரு ஆதீன அங்குரார்ப்பணத்தை தொடர்ந்து நல்லூர் கந்தசுவாமி ஆலய தேரடியில் அமைந்துள்ள அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் தவத்திரு வேலன் சுவாமிகளுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து அங்கு நடைபெற்ற பூசை வழிபாடுகளில் சுவாமிகள் கலந்து கொண்டார்.







அத்துடன் நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள மண்டபத்தில் சமய நிறுவனங்களினாலும் ஓதுவார்களினாலும் நிகழ்த்தப்பட்ட பன்னிரு திருமுறை முற்றோதல் நிறைவுநாள் நிகழ்வில் கலந்துகொண்டு தவத்திரு வேலன் சுவாமிகள் ஆசியுரையாற்றி ஆசி வழங்கினார்.

சார்வரி வருடம் கார்த்திகை மாதம் பதினான்காம் நாள் ஞாயிற்றுக்கிழமை (14.08.5122) கார்த்திகை நன்நாளை முன்னிட்டு அன்று மாலை திருக்கார்த்திகை விளக்கீடு சிறப்பாக சிவகுரு ஆதீனத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.







## சார்வரி வருடம் மார்கழி மாதம்
## Saarvari Year Margazhi Month

சார்வரி வருடம் மார்கழி மாதம் பதினான்காம் நாள் (14.09.5122) சிவகுரு ஆதீன மண்டபத்திற்கான அடிக்கல் பத்து மணிக்கு நல்லைக் கந்தனின் மணி ஒலிக்க நாட்டப்பட்டது.



சார்வரி வருடம் மார்கழி மாதம் பதினான்காம் நாள் (14.09.5122) காலை பத்து மணியளவில் நல்லைக்கந்தனின் மணி ஒலியுடன் சிவகுரு ஆதீனத்திற்குரிய முகப் புத்தகப் பக்கம் ஆரம்பிக்கப்பட்டது.




## சார்வரி வருடம் தை மாதம்
## Saarvari Year Thai Month

முருகப்பெருமான் சுவாமிநாதனாக, ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய சுவாமி மலையில் தந்தையாகிய சிவபெருமானுக்கு பிரணவப் பொருளை குருவாக இருந்து உபதேசம் செய்தமையால் **சிவகுரு** எனவும் அழைக்கப்படுகின்றார். அத்தைப்பூச நன்னாளாகிய சார்வரி வருஷம் தை மாதம் பதினைந்தாம் நாள் (15.10.5122) சிவகுரு ஆதீனத்தில் தவத்திரு வேலன் சுவாமிகளின் தலைமையில் சிவகுரு ஆதீனத்தின் தற்காலிக பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டு, நிரந்தர நந்திக்கொடி ஏற்றப்பட்டது.





பின்னர் சிவகுரு ஆதீனத்திற்குரிய அலுவலகமும், மண்டபமும் திறந்து வைக்கப்பட்டன. அத்துடன் பிரிவுகள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டு வித்தியாரம்ப நிகழ்வும் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சார்வரி வருடம் தை மாதம் பதினெட்டாம் நாள் (18.10.5122) சிறுவர்களுக்கான வகுப்புக்களை தவத்திரு வேலன் சுவாமிகள் ஆரம்பித்தார்.



சார்வரி வருடம் தை மாதம் இருபத்தோராம் நாள் (21.10.5122) தொடக்கம் இருபத்தைந்தாம் நாள் வரை (25.10.5122) பொத்துவிலிலிருந்து பொலிகண்டி வரை (P2P) பல்லாயிரக்கணக்கான மக்களின் எழுச்சிப்போராட்டம் வடக்கு கிழக்கு சிவில் சமூகத்தால் சாத்வீக முறையில் நடாத்தப்பட்டது. தவத்திரு வேலன் சுவாமிகள் இப்போராட்டத்தில் பெரும் பங்காற்றினார்.





P
2
P






## சார்வரி வருடம் மாசி மாதம்
## Saarvari Year Maasi Month

சார்வரி வருடம் மாசி மாதம் இருபத்திரெண்டாம் நாள் (22.11.5122) மஹாசிவராத்திரியை முன்னிட்டு தொண்டமனாறு செல்வச்சந்நிதியில் ஆரம்பிக்கப்பட்ட பாதயாத்திரைக் குழுவினர் மாலை நல்லூரை வந்தடைந்து சிவகுரு ஆதீனத்தில் இரவு தங்கி மறுநாள் காலை நல்லைக்கந்தப் பெருமானைத் தரிசனம் செய்து பஜனை பாடி திருக்கேதீஸ்வரம் நோக்கி புறப்பட்டுச்சென்றனர். அந்நிகழ்வில் தவத்திரு வேலன் சுவாமிகள் ஆசி வழங்கி உரையாற்றினார்.

சார்வரி வருடம் மாசி மாதம் இருபத்தியேழாம் நாள் (27.11.5122) மஹாசிவராத்திரி தினத்தன்று தவத்திரு வேலன் சுவாமிகள் தலைமையில் மாலை 6.00 மணி தொடக்கம் இரவு 7.30 மணி வரை நாம பஜனை, திருவைந்தெழுத்து (பஞ்சாட்சரம்) பாராயணம், சிவ அஷ்டோத்தரசத நாமாவளி அர்ச்சனையோடு கூடிய சிவபூசை, அருளுரை (சத்சங்கம்) ஆகியன இடம்பெற்றன.








சிவகுரு ஆதீனம்
692, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
அலுவலக நேரம் : தினசரி பி.ப 4 - 6

+94 21 222 6711 ( 4 - 6 pm daily)
sivaguruatheenam@gmail.com
சிவகுரு ஆதீனம் - Sivaguru Atheenam

Sivaguru Atheenam
692, Point Pedro Road,
Nallur, Jaffna.
Office Time : 4 - 6 pm daily


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org